Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்க காலக் குறிஞ்சித் திணை மக்களின் வேட்டை மற்றும் கட்டடத் தொழில்நுட்பம்

**முதுமுனைவர் க. விஜயகாந்த், தமிழ்ப் பேராசிரியர்**
**அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி,**
**ஆரணி. kpvijayakanth83@gmail.com**

56

## முன்னுரை

பண்டைய தமிழர்கள் நிலப் பாகுபாட்டில் தம் வாழ்வைத் தொடங்கினர். தத்தமக்கு விருப்பப்பட்ட பகுதியில் தம் குடியை நிலைப் படுத்திக்கொண்டனர். அந்நிலங்களை மலையும் மலை சார்ந்த குறிஞ்சி, காடும் காடு சார்ந்த முல்லை, வயலும் வயல் சார்ந்த மருதம், கடலும் கடல் சார்ந்த நெய்தல், வறண்ட பகுதியாகப் பாலை எனப் பகுத்துத் தம் வாழ்வைத் தொடர்ந்தனர். வாழ்வின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் எனும் வசிப்பிடம் ஆகியனவற்றைத் தம் திணை சார்ந்த நிலப்பகுதியில் என்னென்ன கிடைக்கின்றதோ அவற்றைக் கொண்டு தம் வாழ்வியலை நடத்தியுள்ளனர். அவ்வாறு அவர்களின் திணைசார் வாழ்வியலைத் தொடர்ந்துநடத்திட அந்தந்தத் திணைக்கேற்ற தொழில்நுட்பங்கள் தேவைப்பட்டன. அத்தொழில்நுட்பங்களைத் தம் பட்டறிவாலும் முன்னோரின் வழிகாட்டுதலாலும் உருவாக்கிக் கொண்டுள்ளனர். இத்தொழில்நுட்பங்கள் தம் வாழ்வின் மகிழ்ச்சியான நிலையைத் தக்கவைத்துக் கொள்ளப் பேருதவி புரிந்துள்ளன. இத்தொழில் நுட்பங்கள் ஒவ்வொரு திணைக்கும் சிறப்பானதாக அமைந்திருந்தன. இவை திணை பரிமாற்றத்திற்குப் பெரும்பாலும் உடன்படாதவை. சில நேரங்களில் தேவையற்றதாகவும் அமைந்துவிட்டிருக்கலாம். ஆதலால் ஒரு சில தொழில்நுட்பங்கள் அவை எத்திணைக்கு உரியதாக இருக்கும் என்பதை அதன் பயன்பாடே காட்டிவிடும்.

ஐந்திணைப் பாகுபாட்டில் வாழ்ந்த பண்டைய தமிழ் மக்களின் திணைசார் தொழில்நுட்பங்களை எவ்வாறெல்லாம் பயன்படுத்தியுள்ளனர் என்பதைச் சங்க இலக்கியத்தின்வழிப் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து குறிஞ்சித் திணை மக்கள் வேட்டைக்காகவும் தம் குடியிருப்பு உருவாக்கத்திற்கும் பயன்படுத்திய தொழில்நுட்பங்களை ஆராய்ந்து இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## குறிஞ்சித் திணையின் வேட்டைத் தொழில்நுட்பம்

குறிஞ்சித் திணையின் முதன்மையான தொழிலாக வேட்டைத் தொழில் இருந்துள்ளது. மலைகளில் இருக்கும் விலங்கினங்களில் உணவுக்குத் தேவைப்படும் விலங்குகளையே முதன்மைப்படுத்தி வேட்டையாடியுள்ளனர். வீரம், பாதுகாப்பு மற்றும் கலைத் தேவைக்காக வேட்டையாடியமையை இரண்டாம் நிலைப்படுத்தலாம். உணவுக்காகக் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி ஆகியனவற்றை வேட்டையாடிய செய்தியைச் சங்க இலக்கியத்தின்வழி அறிந்துகொள்ளமுடிகின்றது. பல பாடல்களில் அதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கிழங்கை அகழ்ந்து தின்று விளைநிலத்தைச் சேதப்படுத்தும் சிறிய கண்ணையும் பெரும் சீற்றத்தையும் கொண்ட, சேற்றில் உழன்றதால் கருநிறத்துடன் வரும் ஆண் பன்றியைச் சுருக்குவலை வைத்துப் பிடித்துள்ளனர். இதனை,

***சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்***
***சேறாடு இரும்புறம் நீறொடு சிவண***
***வெள்வசிப் படீஇயர் ....*** (நற்றினை 82: 7 – 9)

எனும் சங்க இலக்கியப் பாடல் அடிகள் தெரிவிக்கின்றது. மேற்கண்ட பாடல் அடிகளில் வசி என்பது கூர்மையான ஒரு வகைப் பிளப்புப் பொறி. அதில் எந்த விலங்கினம் கால் வைத்தாலும் தப்பிக்க முடியாமல் சிக்கிக் கொள்ளும் வகையில் அப்பொறி வடிவமைக்கப்பட்டுள்ளது. வேட்டைக் கருவிகள் உருவாக்கத் தொழில்நுட்பத்தில் வசி என்னும் கருவி இன்றியமையாத ஒன்றாக இருந்துள்ளது.

முள்ளம் பன்றியைப் பொருத்தவரை அம்பை எய்தி வேட்டையாடியுள்ளனர். இதனை,

"***கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை***" (நற்றினை 85: 8 )

எனும் பாடலடி முளவுமானாகிய முள்ளம்பன்றியைக் கானவன் எய்தான் என்பதைத் தெரிவிக்கின்றது. அம்பினால்தான் எய்திருக்க வேண்டும். பன்றி மற்றும் முள்ளம்பன்றி ஆகியனவற்றைத் தனித்தனியே கொல்லும் தொழில்நுட்பத்தை அறிந்தவர்களாகக் குறிஞ்சித்திணை மக்கள் இருந்துள்ளனர்.

அம்பினைப் பொருத்தவரை நுனிப்பகுதி கூர்மையானதாகத் தொடங்கி வரவரப் பருத்துக் காணப்படும். கூர் நுனிப்பகுதி விலங்கினைத் தப்பவிடாமல் தாக்குவதற்கும் பின்பு அது நகராதபடி வீழ்வதற்குச் சிறிது சிறிதாகப் பருத்த பகுதியுமாக ஓர் அரச இலை போன்று வடிவமைத்துள்ளனர். இந்த அம்பு பெரும்பான்மை உலோகத்தால் (இரும்பு) செய்யப்பட்டிருக்கும். அது இரையை உறுதியுடன் தாக்குவதற்காகவும் இரை தப்பி விடாமல் இருப்பதற்காகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அம்பைக் கொண்டு யானையையும் (அகநானூறு 132: 4) மானையும் (அகநானூறு 379: 3) குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடியுள்ளனர் (மூ. சத்தியா: 2016: 79). நேரடியாக உணவிற்காகவும் உணவிற்காக விளைவிக்கப்பட்டுள்ள பயிர் நிலத்தைப் பாதுகாக்க வேண்டியும் இந்த வேட்டைத் தொழில் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலில் கூர்நுனி உள்ள கம்பியாக இக்கருவி வடிவமைக்கப்பட்டிருக்கலாம். அதன் பயன்பாட்டில் நிறைவெய்தாத குறிஞ்சி நில மக்கள் பின்பு அம்பை உருவாக்கி உள்ளனர். இந்த அம்பு உருவாக்குதல் என்பது வேட்டைத்தொழிலைப் பொறுத்தவரை இன்றியமையாத தொழில் நுட்பமாக விளங்குகின்றது. மனித வாழ்வின் உணவு எனும் முதன்மைத் தேவைக்கு அம்பின் பயன்பாடு தவிர்க்க இயலாத ஒன்றாக அமைந்திருந்தது. மனித வாழ்வில் மகிழ்ச்சியைக் கொடுப்பதில் முதலில் இருப்பது உணவே. அவ்வுணவுத் தேவைக்குத் துணையாக இருப்பது அம்பின் தொழில்நுட்பம் .

**குறிஞ்சி நில மக்களின் கட்டடத் தொழில்நுட்பம்** குறிஞ்சி நில மக்கள் தமக்குக் கிடைத்த காட்டுப் பொருட்களைக் கொண்டு குரம்பை என்று அழைக்கப்படும் கூரை வீடு கட்டி அதில் வாழ்ந்துள்ளனர். அவை பெரும்பாலும் மலை, கல், பாறை ஆகியவற்றை ஒட்டி அமைக்கப்பட்டுள்ளன (ப. கோமளா: 2019: 47). இதனை,

***கல்கெழு சிறுகுடிக் கானவன்*** (அகநானூறு 7: 22)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

***கல் அகத்து எம்ஊரே*** (நற்றினை 276: 7)

***கல்கெழு குறவா*** (நற்றிணை 353: 5)

ஆகிய பாடல் அடிகளைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகின்றது.

**கூரையும் இறைவாணமும்**

கூரைகள் புல், இலை, திணைத்தாள் ஆகியவற்றால் வேயப்பட்டிருந்தன. கூரையின் தூண்கள் குறுகிய அளவுள்ள கால்களைக் கொண்டிருந்துள்ளன. இதனைக் கீழ் வரும் பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

***புல்வேய் குரம்பை புலர ஊன்றி*** (அகநானூறு 172: 10)

***குன்றக் குறவன் புல்வேய் குரம்பை*** (ஐங்குறுநூறு 252: 1)

***இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை*** (குறுந்தொகை 153)

குறுகிய நிலையில் இறைவாணம் எனும் தாழ்வாரப் பகுதியுடன் குரம்பை கட்டப்பட்டுள்ளது. மழை பெய்தால் ஒழுகாதவாறும், மழை நீர் தேங்காதவாறும் தம் வீட்டுக்கூரையைக் கூர்மையானதாக அமைத்துள்ளனர். ஓர் அறை கொண்டதாக வீடு கட்டப்பட்டிருக்கின்றது. வீட்டு வாயிலின் பகுதி தாழ்வாரம் எனும் இறைநிலைப் பகுதியுடன் திண்ணைப் பகுதியும் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தாழ்வாரமும் திண்ணையும் பிரிக்க முடியாத வீட்டின் பகுதிகளாகும். இப்பகுதி வெயில் நேரத்தில் அமர்ந்து ஓய்வெடுக்கவும் மழைக்காலங்களில் திண்ணையில் அமர்ந்து மழையின் அழகைப் பார்த்து மகிழ்ந்து இன்புறும் வண்ணமும் இருந்திருக்கின்றது. இறைவாணம் எனும் இத்தாழ்வாரப் பகுதி காற்றோட்டம் உள்ளதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதே வேளை பகலில் வெளிச்சம் உள்ள பகுதியாகவும் இருந்திருக்கும். தொடக்கக் கால மனிதர்கள் தம் தொழிலுக்காகவும் தம் தொழில் நிறைவுற்ற பின்பு ஓய்வெடுக்கவும் மகிழவும் தம் வீட்டின் அமைப்பு அன்றைக்கு இருந்த தொழில்நுட்ப உதவியுடன் அமைத்துள்ளனர். இக்கருத்தை,

***குறிஇறைக் குரம்பை குறவர் மாக்கள்*** (புறநானூறு 129: 1)

***குறியிறைக் குரம்பைநம் மனைவயின் புகுதரும்*** (அகநானூறு 272: 1)

எனும் பாடல் அடிகளின் வழி நிறுவப்படுகின்றது.

**முன்றில் எனும் முற்றம்**

குறிஞ்சி நில மக்களின் வாழ்விடமான குரம்பையின் முன் பகுதியில் முற்றம் எனும் முன்றில் (இல்முன்) எனும் பகுதி இருந்துள்ளது. இது கொஞ்சம் பரந்த நிலப்பரப்பு உடையதாகவும், பாறைகளால் ஆனதாகவும், மரங்கள் நெருங்கியும் இருந்துள்ளது (அகம். 232: 9). மூங்கில் பூக்களும் (அகம். 78: 7 – 8), வேங்கைப் பூக்களும் (நற். 276: 10) பூத்து முன்றிலில் உதிர்ந்து கிடந்துள்ளன. அம்முற்றங்களில் குறிஞ்சித் திணையைச் சார்ந்த ஆண்களான குறவர்கள் கூடி விளையாடியுள்ளனர் (நற். 44: 8). வேங்கைப் பூக்கள் நிறைந்துள்ள முற்றங்களில் குறிஞ்சி நில மக்கள் கள்ளினை உண்டு அதன் களிப்பில் கூத்தாடியுள்ளனர். இதனை,

***…… பெருமழை***
***வாங்கு அமைப் பழனிய நறவு உண்டு***
***வேங்கை முன்றில் குறவையும் கண்டே*** (நற்றினை 276: 8 – 10)

எனும் சங்கப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

கூடி மகிழ்தல் சமுதாயத்தில் இன்றியமையாத வாழ்வியல் பகுதி. இந்தக் கூடிமகிழ்தல் என்பதை ஏதோ ஒரு பொதுப்பகுதியில் பொது இடத்தில் உருவாக்கி மகிழாமல் தம் வீட்டின் ஒரு பகுதியாக முன்றில் என்னும் முற்றத்தை உருவாக்கி மகிழ்ந்துள்ளனர். இப்பகுதியில் அவ்வீட்டில் உள்ள ஆண்களும் பெண்களும் கூடிக் கள்ளினை அருந்தி அக்கம் பக்கத்தினரையும் சேர்த்துக் கொண்டு மகிழ்ந்துள்ளனர். மகிழ்ச்சியின் வெளிப்பாடாகக் கூத்தையும் ஆடியுள்ளனர். இந்நிகழ்வு குறிஞ்சித் திணை மக்களின் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாகவே இருந்துள்ளது. மகிழ்ச்சிக் கொண்டாட்டம் வாழ்நாளைப் பெருகச் செய்யும். எனவே இப்படிப்பட்ட கொண்டாட்டத்திற்கு அவர்களது வீட்டின் கட்டட அமைப்பு தொழில்நுட்பமே காரணம்.

மேற்கண்ட தரவுகளிலிருந்து குறிஞ்சி நில மக்கள் தம் வாழிடத்தை இயற்கைச் சூழலில் தமக்கு கிடைத்த நிலத்தில் மலைப்பகுதியில் கிடைத்த பொருட்களைக் கொண்டு தம் இல்ல கட்டுமானத்தை நிறுவியுள்ளனர்.

**இறுதியாக…**

சங்க கால குறிஞ்சி நில மக்கள் தம் உணவின் ஒரு பகுதியான வேட்டை உணவுக்காக அவர்கள் பயன்படுத்திய கருவிகளும் அதன் தொழில்நுட்பங்களும் அவர்களது பட்டறிவாலும் தம் முன்னோரின் வழிகாட்டுதலின்படியும் அமைந்திருந்த மாற்றைத் தெளிவாகக் காணமுடிகின்றது. அதேபோல் அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான இல்லத்தை அமைத்துக் கொண்ட பாங்கும் அச்சூழலுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருந்தது. எனவே குறிஞ்சித் திணை மக்கள் தம் மகிழ்வான வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ள வேட்டைக்குச் சென்று வேட்டை உணவை உண்டதும் தம் இல்லத்திலும் அருகிலுமுள்ள அனைவரோடும் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டு வாழ்ந்தமைக்கு அவர்களது தொழில்நுட்பம் பேருதவி புரிந்துள்ளது.

**துணைநூற் பட்டியல்**

1. கோமளா, ப., 2019, இனக்குழு மரபு: பாட்டும் தொகையும், சென்னை, முரண்களரி படைப்பகம்.
2. சங்க இலக்கியங்கள், சென்னை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
3. சத்தியா, மூ., 2016, புழங்கு பொருள் பண்பாடு: சென்னை, நெய்தல் பதிப்பகம்